Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 92

திங்கட்கிழமை
26 பெப்ரவரி 2024

மாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## முச்சந்தி முரளி



"ஆனானப்பட்ட அமைச்சருக்கே இவ்வளவு அழுத்தம் குடுக்கினம் எண்டா நிலைமை கடும் சிக்கல்தான் பாருங்கோ"




# தமிழ்த் தேசிய அரசியலை இளையோரிடம் கையளிக்குக!

## மூத்தோர் ஒதுங்கவேண்டும் – ஈ.சரவணபவன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 26**

**அரசியலில் உள்ள - நான் உட்பட - வயதில் மூத்தவர்கள் தமிழ்த் தேசியத்தில் நாட்டமுள்ள இளைஞர்களுக்கு வழிவிடுவதோடு, இளைஞர்களது கையில் தமிழ்த் தேசிய அரசியல் போராட்டத்தை ஒப்படைக்கவேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.**

11



## ரணில் - சந்திரகுமார் கொழும்பில் சந்திப்பு

கொழும்பு, பெப். 26
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச்செயலருமான மு. சந்திரகுமார் மற்றும் சமத்துவக் கட்சியின் தலைவர் சு.மனோகரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்டம் உட்பட வடக்கின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள்,

11



## ஆர்.ஆர். உடல் நேற்று அடக்கம்

வவுனியா, பெப். 26
வவுனியா, கோயில் குளத்திலுள்ள உமாமகேஸ்வரன் சமாதிக்கு அருகில், புளொட்டின் மூத்த உறுப்பினரான ஆர்.ஆர். என்று அழைக்கப்படும் வே.நல்லைநாதனின் உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.
நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட ஏராளமானோர் நேற்றைய இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றனர். (அ-ஒ-110)

## வாளால் வெட்டிவிட்டு 8 பவுண் தாலி கொள்ளை

### சுதந்திரபுரத்தில் சம்பவம்

முல்லைத்தீவு, பெப். 26
சுதந்திரபுரத்தில், வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
வாகனத்தில் வந்த குழுவொன்றே 27 வயதுடைய நபர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு, பெண்ணொருவர் அணிந்திருந்த 8 பவுண் தாலிக் கொடியைக் கொள்ளையடித்துள்ளது.

11

## ஆமையோடு ஒருவர் கைது

புதுக்குடியிருப்பு, பெப். 26
சட்டவிரோதமாக ஆமையை இறைச்சிக்காகக் கொண்டு சென்ற 32 வயதுடைய நபரை கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் ஆமையை மீட்டுள்ளனர்.
நீண்டநாட்களாக ஆமையைப் பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்து வந்ததாக சந்தேகநபர் மீது பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-ஒ-19)

## சடலம் மீட்பு

சாவகச்சேரி, பெப். 26
தவறான முடிவெடுத்து 55 வயது குடும்பத் தலைவரொருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி - கல்வயலில் இடம்பெற்றது.
பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு பணித்துள்ளார். (அ-ஒ-9)

# அழுத்தங்கள் தொடர்ந்தால் அமைச்சுப் பதவியைத் துறப்பேன்

## இந்தியத் தூதுவருக்கு நேரில் நேற்றுக் கூறினாராம் டக்ளஸ்

கொழும்பு, பெப். 26
கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கும் விவகாரம் எனது அமைச்சுக்குரியது அல்ல. இந்த விடயத்தில் தொடர்ந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுமாக இருந்தால் கடற்றொழில் அமைச்சுப் பதவியைத் துறப்பேன் - இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் நேற்று நேரில் தெரிவித்துள்ளார்.
இந்தியத் தூதுவரின் வீட்டில் நேற்று மாலை ஒன்றரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

11

### யாழ். நகரில்

## மோ. சைக்கிள் எரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26
யாழ்ப்பாணம் நகரில் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக் கடைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றிரவு தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளது.

11

## மோ.சைக்கிள் திருட்டு

வவுனியா, பெப். 26
புதிய பேருந்து நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று

11

# 'எட்கா'வினால் பாதிப்பில்லை

## வெளிவிவகார அமைச்சர் நற்சான்றிதழ்



கொழும்பு, பெப். 26
இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள 'எட்கா' உடன்படிக்கை தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. அந்த உடன்படிக்கைமூலம் இலங்கையின் ஊழியப்படையணிக்கு பாதிப்பு ஏற்படாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.
'எட்கா' உடன்படிக்கைமூலம் இந்திய முதலீட்டாளர்கள், இந்திய தொழில்துறை மற்றும்

11

## நிறைவேற்றதிகார நீக்கம்: பெரமுன நிபந்தனை!

கொழும்பு, பெப். 26
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டுமெனில் தற்போதைய தேர்தல் முறைமையிலும் மாற்றம் அவசியம் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டால் பிரதமர்தான் நாட்டின் தலைவர். பிரதமரைப் பலப்படுத்தும் வகையிலான தேர்தல் முறைமை அவசியம்.
தற்போதைய தேர்தல் முறைமையின்கீழ், பிரேமதாஸ ஜனாதிபதியின்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி உந்துசக்தியாக பெண்களை மாற்றவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு,பெப். 26

**நாட்டில் பெண்களுக்கு சரிநிகர் உரிமைகள் வழங்கப்பட்டு - நாட்டின் அபிவிருத்திக்கு உந்துசக்தியாக அவர்களை நாம் மாற்றவேண்டும். இதற்கென மகளிர் ஆணைக்குழு, ஜனாதிபதி செயலணி என்பன உருவாக்கப்பட வேண்டும்.**

- இவ்வாறு கண்டியில் இடம்பெற்ற மகளிர் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் பெண்களால் தேவேந்திரமுனையிலிருந்து பருத்தித்துறைமுனை வரை சிரமமின்றிப் பயணிக்க முடிந்தது. இன்று அந்த நிலை இல்லை.

நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர்.

நாட்டில் சரியான பாதுகாப்பு, பொருத்தமான சூழல் , கவனிப்பு இல்லாத காரணத்தால் தொழிலாளர் பரப்பில் 34 வீதமான பணியாளர்களே பெண்களாகவுள்ளனர்.

பெரும்பாலான பெண்கள் வீட்டிலும் வெளியிடங்களிலும் பன்முக துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். பொருளாதார நெருக்கடியும் பெண்களை மேலும் அழுத்தங்களுக்கு உள்ளாகுகின்றது.

இன்றைய அரசியலிலும் ஜனநாயகத்திலும் அடிமட்ட சக்தியாக பெண்கள் கருதப்பட்டாலும், பெண்கள் தற்போது வெறுமனே அரசியல் ஆயுதமாக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையை மாற்றி நாட்டின் அபிவிருத்திக்கு உந்துசக்தியாக பெண்களை நாம் மாற்றவேண்டும்- என்றார். (ச-இ)

## வேட்பாளர் தெரிவால் பெரமுனவில் குழப்பம்

கொழும்பு, பெப்.26

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரைத் தெரிவு செய்வதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளரை மையப்படுத்தி ஆளுங்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளை சமநிலைப்படுத்தவே பஸில் ராஜபக்ச அவசரமாக நாடு திரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## தேசிய மக்கள் சக்தியை சீண்டுகின்றது ஐ.ம.சக்தி

கொழும்பு, பெப்.26

தமது கட்சியின் பொருளாதாரக் குழுவுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுத்துள்ளது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி.

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கூறுகையில்;

ஐக்கிய மக்கள் சக்தியிடம் சிறந்த வேலைத்திட்டமொன்று உள்ளது. முடிந்தால் எமது அணியில் உள்ள பொருளாதாரக் குழுவுடன், தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழு விவாதத்துக்கு வரட்டும். எமது சவாலை ஏற்க தேசிய மக்கள் சக்தி தயாரா? -என்றார். (எ-44)



## வன்னேரிக்குளத்தில் சீரமைப்புப் பணிகள்

### *சிறுபோகம் இம்முறை இல்லை*

வன்னேரிக்குளம், பெப். 26

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தின்கீழ் இவ்வாண்டு சிறுபோகம் இடம்பெறாது என கிளிநொச்சி மேற்குக்கான நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தின் சீரமைப்பு வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதனாலேயே வன்னேரிக்குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கைகள் மேற்கொள்ளப்படாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக வன்னேரிக்குளம் விளங்குகின்றது. இந்தக் குளத்தின் கீழ் காலபோகத்தில் 363 ஏக்கரிலும் சிறுபோகத்தில் குறைந்தது 121 ஏக்கரிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-13)

## தமிழ், முஸ்லிம் தரப்புகளை இணைத்து புதிய கூட்டணி

கொழும்பு, பெப்.26

தெற்கு அரசியல்வாதிகளை மட்டுமன்றி, வடக்கு - கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களையும் இணைத்துக்கொண்டு புதிய அரசியல் கூட்டணி பயணிக்கும் எனத் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

75 ஆண்டுகள் வாக்குறுதி அரசியலால் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். அந்த கலாசாரத்தை நாம் மாற்றவேண்டும். சுதந்திரத்தின் பின்னர் பிரிவினை வாதங்களால் நாடு பல கலவரங்களை எதிர்கொண்டது.

30 வருட கொடூரப் போரையும் எதிர்கொண்டது. இனியொரு போதும் அவ்வாறான போர்களுக்கும், வன்முறைகளுக்கும் இடமளிக்கக்கூடாது.

வியத்மக அமைப்பைக் கட்டியெழுப்பி, புதிய ஜனாதிபதி வேட்பாளரை அறிமுகப்படுத்தி அவரை வெற்றி பெறச்செய்தோம். எனினும் அது தோல்வியிலேயே முடிவடைந்தது. இனி நாம் அவதானத்துடன் சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)



## வேட்பாளர் உறுதி

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நிச்சயம் களமிறங்குவார் என்று கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குச்சீட்டில் பொதுஜன பெரமுன கட்சியின் சின்னம் நிச்சயம் இருக்கும்.

ஆனால், பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென்று சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார். (ம-44)

## இலங்கைக்கு கண்காணிப்பு கப்பல்

கொழும்பு, பெப்.26

இலங்கைக்கு நடுத்தர தாங்குதிறன் கண்காணிப்புக் கப்பல் ஒன்றை அமெரிக்கா வழங்கவுள்ளது. இந்தத் தகவலை முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செயலாளர்ரிச்சட்வேர்மா தெரிவித்துள்ளார்.

அதற்கென 9 மில்லியன் டொலர் நிதியுதவியை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வழங்கியுள்ளது என்று அமெரிக்கக் கடலோர காவல்படையின்துணை செயலாளர் வர்மா தெரிவித்தார். (எ-இ)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.26

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு, குறித்த சங்கக் கூட்ட மண்டபத்தில் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. புதிய நிர்வாகசபைத் தலைவராக ப.கேசவதாசன், உபதலைவராக செ.குமாரசிங்கம், பணிப்பாளர்சபை உறுப்பினர்களாக சி. பரமானந்தராசா, கா.பார்த்தீபன், தி. உதயசூரியன், ஆ. அனஸ்ரிகா, திருமதி கு. சயந்தினி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (ப)

## கனிந்த இதயம் நிறைந்த வாழ்வு



தவக்கால சிந்தனை

கை மூடியிருக்கும் வரை எதையும் கொடுக்கவும் முடியாது, பெற்றுக்கொள்ளவும் முடியாது. கொடுப்பதற்கென்று விரிக்கப்பட்ட கரம்தான் பெற்றுக்கொள்ளும் தகுதியைப்பெறுகின்றது. பெற்றுக்கொள்வதில் இல்லாத பெருமையும் பேரின்பமும் கொடுப்பதில் உள்ளது என்பதை இறைவன் கற்றுத் தருகின்றார். ஒவ்வொரு கணமும் எத்தனையோ திறமைகள், நலன்களை இறைவனிடமிருந்து பெறுகின்றோம். எம்மிடம் கைமாறை எதிர்பார்த்தா? அவர் அவற்றை வழங்குகிறார். கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது என்று எவரும் தயங்கத் தேவையில்லை. இதயத்தில் சுரக்கின்ற அன்பை இரக்கத்தை இயல்பாகக் கொடுக்க முன்வந்தால் அது எல்லாவற்றையுமே வழங்கத் தயாராகிவிட்டநிலைதான். இறைவன் எமக்குக் கொடுத்திருப்பதெல்லாம் பகிர்ந்து வாழ்வதற்காகத்தான். நாம் ஒருவருக்கு இரக்கம் காட்டும்போது இறைவனையே அவருக்குக் காட்டுகிறோம் என்ற உணர்வு மேலோங்க இத்தவக்காலத்தை முன்னெடுப்போம்.

**எஸ்.யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைமை மாற்றம்: பரிந்துரைகள் ஏப்ரல் மாதம்

**கொழும்பு, பெப்.26**

**தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்திர தெரிவித்துள்ளார்.**

ஜனநாயக நாடுகள் பலவற்றின் தேர்தல் முறைமைகளை ஆய்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக தேர்தல் முறைமை திருத்தத்துக்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

தேர்தல் முறைமையை மாற்றுவது தொடர்பில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து 60க்கும் மேற்பட்ட யோசனைகள் கிடைத்துள்ளன. அந்த முன்மொழிவுகள் தொடர்பான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்முறை திருத்தம் தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் நீதியரசர் டெப் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி நியமித்திருந்தார். இந்த ஆணைக்குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. (எ-இ)



## ரூபா வலுவாவதால் விலைகள் தளரலாம்

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கடந்த சிலமாதங்களாக வலுவடைந்து வருவதனால் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலை குறையலாம் என்று அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் பொதுமக்களுக்கு இதன் நன்மை கிடைக்கும்.

பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## சட்டவிரோத புலம்பெயர்வு: குடும்பம் கைது

கொழும்பு,பெப். 26

போலியான விசாக்களைப் பயன்படுத்தி ஐரோப்பாவுக்குச்செல்ல முற்பட்ட குடும்பமொன்று நேற்றுமுன்தினம் விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் குடிவரவு, குடியகல்வு பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

4 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குடும்பம் ஒரு கோடி நாற்பது இலட்சம் ரூபாவை தரகர் ஒருவரிடம் செலுத்திப் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## மகன் தாக்கி தந்தை சாவு!

கொழும்பு,பெப். 26

மகனின் கோடரித் தாக்குதலுக்கு இலக்காகி தந்தை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி பிடிகல- களுஆராச்சி கொட பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான மகனை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## தரவுகளைத் திருடி குற்றச்செயல்கள்

கொழும்பு, பெப்.26

நபர்களின் தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய சில இணையத்தளங்களில் இருந்து பெறப்படும் தரவுகளை கணினி ஹக்கர்கள் குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்துகின்றனர் என்று கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

பல்வேறு பாதுகாப்பு உத்திகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால், சில அரசு மற்றும் தனியார் இணையத்தளங்கள் மூன்றாம் தரப்பினருக்கு மிக எளிதாகத் தகவல்களை வழங்கும் வகையில் உள்ளன.

முகநூல், வட்ஸ்அப், மின்னஞ்சல் போன்ற முக்கியமான தரவுகளை உள்ளடக்கிய தனிப்பட்ட கணக்குகள் கணினி ஹெக்கர்களால் திருடப்படலாம் என கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது. (எ-இ)

## தேசபந்துவுக்கு சேவை நீடிப்பு!

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு பேரவைக்கு இது தொடர்பாக ஜனாதிபதி முன்மொழியவுள்ளார் என்று தெரியவருகின்றது.

தேசபந்து தென்னக்கோன் கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். 3 மாத காலத்துக்கு வழங்கப்பட்ட நியமனம் எதிர்வரும் 29 ஆம் திகதி நிறைவடையும் நிலையிலேயே மீளவும் சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (எ-இ)

## பாடசாலை மாணவி பட்டப்பகலில் கொலை

பாடசாலை மாணவி ஒருவர் பட்டப்பகலில் வீட்டில் வைத்துவெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவம் கம்பஹா - கந்தானை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அதே பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒருதலைக்காதல் விவகாரத்தால் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் 21 வயதான சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## புதினம் தெரியுமோ?

முந்தியொரு காலத்தில எங்கட ஆக்கள் 'பண்டமாற்று' முறையிலதான் சீவிச்சவை. அந்தப் பண்டமாற்று முறையில, இப்ப இடமாற்றங்களும் நடக்கத் தொடங்கியிருக்குதாம்.

கொஞ்சக்காலத்துக்கு யாழ்ப்பாணத்தில இருந்து ஆசிரியர்களாகத் தெரிவானவைக்கு வெளிமாவட்டங்களுக்குத்தான் அப்பொயின்ட்மென்ட் பண்ணினவை. அந்த முதல் நியமனக் கடிதத்தில ஆறு இல்லாட்டி ஏழு வருசம் கட்டாயம் வெளிமாவட்டத்தில வேலை செய்யோணும் எண்டும் போட்டுத்தான் அனுப்பினவை. எப்பிடியோ சுத்திச் சுழண்டு வெளிமாவட்டத்தில பிற்காலத்தில வேலை செய்யிறதைவிட, முதலே செய்திட்டால் பிறகு நிம்மதியா சொந்த மாவட்டத்திலேயே வேலை செய்யலாம் எண்டதால எல்லாரும் கடும் கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு தங்களுக்கு ஒதுக்கின மாவட்டங்களுக்குப் போய் வேலை செய்தவை. குறிப்பிட்ட வருசம் முடிய அவை சொந்த மாவட்டத்துக்கு வந்திட்டினம். அப்பியிருந்தும் வெளிமாவட்டங்களில ஆசிரியர் பற்றாக்குறை இருந்ததால, யாழ்ப்பாண மாவட்டத்தில இருந்து ரண்டு வருச நிபந்தனை இடமாற்றத்தில திரும்பவும் ஆசிரியர்களை அனுப்பினவை. அவையும், ஒருமாதிரி பல்லைக் கடிச்சுக்கொண்டு 'சோதினை மேல் சோதினைபோதுமடா சாமியெண்டு' பாட்டுப்படிக்காத குறையா, தங்களுக்கு ஒதுக்கின மாவட்டங்களுக்குப் போய் வேலை செய்திட்டு வந்தவை.

இப்ப என்னெண்டால், வெளிமாவட்டங்களில 3 வருசம் வேலை செய்திருக்காட்டி அந்த ஆசிரியர்மாருக்கும் வெளிமாவட்டத்துக்கு இடமாற்றம் குடுக்கோணும் எண்டு வடக்கு மாகாணக் கல்விக்குப் பொறுப்பான மேலிடம் ஒற்றைக்காலில நிக்குதாம். அதோட ஏற்கனவே நிபந்தனை அடிப்படையில வெளிமாவட்டங்களில இரண்டு வருசம் வேலை செய்த ஆசிரியர்களையும், இடமாற்ற லிஸ்ட்டுக்குள்ள போட்டிருக்கிறாராம்வடமாகாணப்பெரியவர்.மேலிடத்துக்குவெளிமாவட்டத்தில இருந்து எத்தினைபேர் யாழ்ப்பாணத்துக்கு வருகினமோ, அதேயளவான ஆசிரியர்மார் வெளிமாவட்டத்துக்கும் போகோணுமாம். இங்கதான் இருக்குதுசிக்கல்.

வெளிமாவட்டங்களில கூடுதலா ஆரம்பப்பிரிவுக்கு படிப்பிக்கிற ஆசிரியர்மார்தான் இருக்கினம். அதோட கலைப்பட்டதாரியளும் கனக்கப்பேர் ஆசிரியர்களா இருக்கினம். வாறதெண்டா அவைதான் யாழ்ப்பாணத்துக்கு வரோணும். ஆனால் தொழில்நுட்பப் பாடங்கள், விவசாய விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் எண்டமாதிரி பாடங்களுக்கு யாழ்ப்பாணத்திலேயே கொஞ்சப்பேர்தான் இருக்கினம். அவையில கனபேருக்கு வெளிமாவட்டம் போகச் சொல்லி கடிதம் வந்திருக்காம். ஆனால் அவைக்குப் பதிலா அதேபாடம் படிப்பிக்கிறவை யாழ்ப்பாணத்துக்கு வரேலை. வெளிமாவட்டத்தில அப்பிடியான பாடத்துக்கு ஒண்டிரண்டு பேர்தான் இருக்கினம். அப்ப எப்பிடி வாறது? அதால அங்க இருந்து ஆரம்பப்பிரிவு, மியூசிக், டான்ஸ், கலை எண்டு ரீச்சர்மார் யாழ்ப்பாணம் வர, அந்தப் பாடங்களோட சம்பந்தமேயில்லாத தொழில்நுட்பம், விவசாய விஞ்ஞானம், உயிரியல், பௌதிகம், இரசாயனம் மாதிரியான பாடங்களைப் படிப்பிக்கிறவை வெளிமாவட்டங்களுக்குப் போகப்போயினம். இதைத்தான் பண்டமாற்று இடமாற்றம் எண்டுறது. கண்ணைமூடிக்கொண்டு கணக்கு காட்டுறதுக்காக இடமாற்றம் செய்தால் இப்பிடித்தான் வரும்.

இதைவிட இடமாற்றம் வந்த ஆசிரியர்களின்ர மேல் முறையீடுகளை வாசிச்சுக்கூட பாக்காமல், அவையை இப்ப இருக்கிற பள்ளிக்கூடங்களில 'சைன்'பண்ண அனுமதிக்க வேண்டாமெண்டு அதிபர்மாருக்கு, ஏதோ பெரிய இங்கிலாந்து 'குயின்' எண்ட நினைப்பில வாய்மொழி உத்தரவும் குடுக்கிறாராம் மேலிடத்துப் பெரியவர்.

இப்ப சிக்கல் என்னெண்டால், இப்பிடியான முக்கியமான - ரீச்சர்மார் அரிதான- பாடங்களை எடுத்த பிள்ளையள், இந்தப் பண்டமாற்று இடமாற்றத்தால படிப்பிக்க வாத்திமார் இல்லாமல் எக்ஸாமில குறைவாத்தான் மார்க்ஸ் எடுக்கப் போகுதுகள். இன்னொரு பக்கம் வெளிமாவட்டத்தில படிப்பிக்க பிள்ளையள் இல்லாமல் ஆசிரியர்மார் மேலதிகமா இருக்கப் போயினம். பிறகு 'எங்கட கல்வி விழுந்திட்டுது 'எண்டு ஒப்பாரி வைச்சு ஒரு பிரியோசனமுமில்லை.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளணிப் பற்றாக்குறையால் நெருக்கடியில் எயார்லைன்ஸ்

## ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு,பெப். 26
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள அதிகளவான பணியாளர் பற்றாக்குறையால் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடுகின்றது என்று தெரிவித்து எயார்லைன்ஸ் ஊழியர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் ஸ்ரீலங்கா சுதந்திர சேவைகள் சங்கத்தின் தலைவர் ஜனக்க விஜயபத்திரண தெரிவிக்கையில்;

'அதிக எடையுடன் வண்டிலை ஏற்றினால், வண்டிலை இழுக்கமுடியாமல் மாடு இறந்துவிடும்' என்பது போன்ற நிலையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் செயற்படுகிறது.

தற்போது முதிர்ச்சியடைந்த அனுபவமுள்ள பெருமளவான பணியாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். நிறுவனத்தில் அதிகளவு பணியாளர் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமாணங்கள் அடிக்கடி தாமதம் மற்றும் இரத்துச் செய்யப்படுவதால் பயணிகளின் கடும் சொற்களைச் சகித்துக் கொள்ள முடிய வில்லை.

இந்த நிலைமை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் நாட்டின் பெருமை - நற்பெயர் என்பவற்றை மோசமாகப் பாதிக்கும் - என்றார்.

இதேவேளை- நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் வேலைநிறுத்தத்தால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இந்தியாவின் சென்னை, இந்தியாவின் ஹைதராபாத், பங்களாதேஷின் டாக்கா மற்றும் மலேசியாவின் கோலாலம்பூர் செல்லும் விமாணங்கள் சற்று தாமதமாகின. (ச-இ)

## உயர்தர மாணவர்களுக்கு இலவச தொழில் பயிற்சி

கொழும்பு,பெப். 26
இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு ஆங்கில மொழி வழிகாட்டல் மற்றும் தொழில்சார் பாடம் ஒன்றை இலவசமாகக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி முதல் ஆரம்பிக்கப் படும்.

நாடளாவிய ரீதியில் 300 நிலையங்களைப் பயன்படுத்தி இந்தப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

பாண்டியன்குளம் ம. வித்தியில்

# உயர்தர வகுப்புகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை

முல்லைத்தீவு, பெப்.26
துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பிரிவுகளான கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் அனைத்துப் பாடங்களுக்கும், வணிகப் பிரிவில் வணிகக் கல்வி, பொருளியல் பாடங்களுக்கும், கலைப்பிரிவில் பொருளியல், புவியியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் கற்றல் தொடர்பாகப் பெரும் சவாலை எதிர்கொள்கின்றனர்.

400 வரையான மாணவர்கள் கற்கின்ற குறித்த பாடசாலையில், ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றமையால் மாணவர்கள் வேறு பாடசாலைக்கு மாறவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலையில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக் குறையைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-13)




# கடனுக்கு அதிக வட்டி; இலங்கை முன்னிலை

கொழும்பு,பெப். 26
உலகவங்கியின் அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கு அமைய, அரச வருமானத்திலிருந்து கடனுக்காக அதிக வட்டியைச் செலுத்தும் நாடாக இலங்கையே உள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் அதன் வருமானத்திலிருந்து, கடனுக்காக 33 சதவீத வட்டியைச் செலுத்தியது. அந்த ஆண்டில் கடனுக்காக வட்டி செலுத்தும் நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தில் இருந்தது.

2020ஆம் ஆண்டில் 71 சதவீதத்தையும், 2023 ஆம் ஆண்டு 77 சதவீதத்தையும் கடனுக்கான வட்டியாகச் செலுத்தியுள்ளது என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் 2000 ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை கடனுக்காக அதிக வட்டியைச் செலுத்தும் நாடாக இலங்கை காணப்படுகிறது என்றும் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். (ச-இ)

# 2 ஆண்டுகளில் 2,500 தாதியர் வெளியேற்றம்

கொழும்பு,பெப். 26
நாட்டில் கடந்த இரண்டு வருடங்களில் 2 ஆயிரத்து 528 தாதியர்கள் தொழிலில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வெளியேற்றம் காரணமாக சுகாதாரத்துறையில் பெரும் நெருக்கடி உருவாகும் என்றும் அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் ரவீந்திர கஹந்தவராச்சி குறிப்பிட்டார். (ச-இ)

# குடிதண்ணீரின்றி பூவரசங்குளம்

முல்லைத்தீவு, பெப்.26
மாந்தை கிழக்கு, பூவரசங்குளக் கிராம மக்கள் குடி தண்ணீர் பெறுவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

141 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக்கிராமத்துக்குக் கரும்புள்ளியானிலிருந்து குழாய்கள் வழியாகவே குடிதண்ணீர் வருகின்றது. ஆனால், அந்தக் கிராமத்தின் முதன்மை வீதிகளுக்கு மட்டுமே குடி தண்ணீர் கிடைக்கின்றது. அனைத்துக் குடும்பங்களும் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. குடிதண்ணீரை கிராமத்தினர் அனைவரும் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கையை அதிகாரிகள் எடுக்கவேண்டுமென பூவரசங்குளக் கிராம மக்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (ப-13)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர்ப் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# ஐ.நா. எனும் அவகாச வழங்கி!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகின்றது. ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதங்கள் மார்ச் மாதம் 4ஆம் திகதி முன்னெடுக்கப்படவிருக்கின்றது. இந்தக் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக கொழும்பு, சிலவாரங்களாகவே பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினர் சர்வதேச காய்நகர்த்தல்களையும் தற்போது ஆரம்பித்திருக்கின்றனர். இதனால், கொழும்பு எவ்வாறு காய்நகர்த்துமோ? சர்வதேசம் ஏதேனும் விட்டுக்கொடுப்புக்களைச் செய்துவிடுமோ? என்ற அச்சம் தமிழர் மனங்களில் தற்காலத்தில் மேலோங்கியிருப்பதும் கண்கூடு.

55 ஆவது கூட்டத்தொடரின் இலங்கை தொடர்பான விவாதத்தை மிகத்திடமாகவும் சர்வதேசப் பலத்துடனும் எதிர்கொள்வது என்ற முடிவுக்கு இலங்கை வந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள். 2022 ஆம் ஆண்டு இறுக்கமான நிபந்தனைகளுடன் இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டபோது - சர்வதேசத்தில் தனக்கேற்ற மாற்று ஆதரவுத் தளமொன்றை ரணில் ஏற்படுத்த விளைந்தார். அணிசேரா நாடுகளையும் - ஆபிரிக்கக் கூட்டணிகளையும் - தன்னுடன் இணைத்துப் பயணிக்கும் முயற்சியில் அவர் தீவிரமாக இறங்கினார். மனித உரிமைகளைப் பேணுவதில் தற்போது உலகிலுள்ள வெகுசில தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி சிறில் ரமபோசா தொடக்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இதுவரை இலங்கையை எதிர்த்துக் குரலெழுப்பாத தன்சானியா, பஹமாஸ், எத்தியோப்பியா, பெனின் குடியரசு உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்கள்வரை இலங்கை விவகாரத்தில் ரணில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள தலைவர்களின் பட்டியல் மிக நீட்சியானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளைத் துடைத்தெறிவதற்கு இலங்கை எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அத்தனையும் தோல்வியே கண்டன. இதுவரை இலங்கையை பொறுப்புக்கூறச் செய்வதற்கு சர்வதேசத்தால் முடியாவிட்டாலும், மறுமுனையில் தீர்மானங்கள்நீர்த்துப்போகச்செய்யப்படாமல் உயிர்ப்புடன் இருக்கும் பின்னணியில் இதை இலங்கையின் தோல்வி அல்லது பின்னடைவு என்றும்கூடக் கொள்ளலாம். ஆதலால், இந்த வருடத்தில் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்கள் இரு தரப்புக்கும் மிகமிக முக்கியமானவை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் உகண்டாவில் வைத்து அணிசேரா நாடுகளின் தலைவர்களுடன் - ஆபிரிக்கத் தலைவர்களுடன் -ரணில் மேற்கொண்ட பேச்சுகள், அவர்களை 'தன் அணியாக்க' ரணில் கைக்கொள்ளும் வியூகமா? என்றும் கருதப்பட்டது. இவையெல்லாம் இணைந்து இவ்வருடக் கூட்டத் தொடரில் வலுவாகவே எதிரொலிக்கும் என்று நம்பப்படுகின்றது.

தாமதித்த நீதி- மறுக்கப்பட்ட நீதி என்பார்கள். நீதி எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவே செய்கின்றது. இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் நெருங்குகின்ற நிலையில், போரில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிட்டுவதற்கான பொறிமுறைகளின் பூர்வாங்க நடவடிக்கைகள்கூட இன்னும் ஆத்மார்த்தமாக ஆரம்பிக்கப்படாமல் இருப்பது ஐ.நா.வின் அப்பட்டத் தோல்வி. ஐக்கிய நாடுகள்சபை தன் நிலைப்பாட்டில் உறுதியாக நின்றிருந்தால், அழுத்தத்தை உரிய வகையில் கொடுத்திருந்தால் இன்று தப்பித்தோடும் வாய்ப்பை கொழும்பு தேடிக்கொண்டிருக்கச் சந்தர்ப்பமில்லை. இந்த வருடத்திலாவது தமிழர்களின் நீதிக்கான நெடும் பயணத்தில் ஓர் ஆற்றுப்படுத்தலை ஐ.நா. வழங்குமா? என்பதே ஈழத் தமிழர் களின் மனங்களில் தற்போதுள்ள எதிர்பார்ப்பு....!





# நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் பரிந்துரைகள் உள்ளீர்ப்பு

## அமெரிக்காவுக்கு உறுதியளிப்பு

**கொழும்பு, பெப். 26**

**நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு பயணம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சிவில் அமைப்புகளின் பரிந்துரைகளையும் உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சர் எடுத்துரைத்தார்.

(ச-இ)

# சுற்றுலாவிகள் அதிகரிப்பு ஹொட்டல்களில் நெருக்கடி

இலங்கையில் உள்ள நட்சத்திர விருந்தகங்களில் பணியாளர்களுக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்குவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக விருந்தக நிர்வாகங்கள் முறையிட்டுள்ளன.

முகாமைத்துவ சேவை தொடக்கம் சமையல் அறை வரை அனைத்து திணைக்களங்களிலும் பணியாளர் வெற்றிடங்கள் உள்ளன.

விருந்தக பணியாளர் தரத்துக்கு பயிற்சிபெற்ற பலர் வெளிநாடுகளுக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்று வெளியேறியதால் விருந்தகங்களில் பணியாளர் வெற்றிடம் அதிகரித்துள்ளது. விரைவில் பயிற்சிபெற்ற இளைஞர்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவை கோரிக்கை விடுத்துள்ளன. (ச-இ)

# இறைச்சி விலை மீளவும் உயர்வு!

நாட்டில் கோழி இறைச்சியின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ கோழி இறைச்சி ஆயிரத்து 150 ரூபாவாகவும் தோல்நீக்கப்பட்ட கோழி இறைச்சி ஆயிரத்து 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை ஒரு கிலோ ஆட்டிறைச்சி 3 ஆயிரத்து 300 ரூபாவாகவும், மாட்டிறைச்சி 2 ஆயிரத்து 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(ச-இ)

# உயர்வடையும் அரிசி விலை!

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக கீரிச் சம்பா அரிசி விற்பனை செய்யப்படுவதால் அரிசி வகைகளின் விலை அதிகரிக்கலாம் என்று அரிசி ஆலை உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கீரிச்சம்பா அரிசி கட்டுப்பாட்டு விலையான 280 ரூபாவைவிட 380 ரூபா முதல் 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்தநிலை தொடர்ந்து நீடிக்கும்போது ஏனைய அரிசி வகைகளின் விலையும் அதிகரிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# 10 இலட்சம் மின்னிணைப்பு கடந்த ஆண்டில் துண்டிப்பு

கொழும்பு, பெப். 26

கடந்த ஆண்டில் நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைக் குறைப்பதற்கான துறைசார் கண்காணிப்புக் குழுவில் தெரியவந்துள்ளது. துண்டிக்கப்பட்ட இணைப்புகளுக்குமறு இணைப்பை பொருத்த கட்டணத்தை 50 சதவீதம் குறைப்பதோடு, நிலுவையிலுள்ள கட்டணத் தொகையை தவணையாகச்செலுத்த அனுமதிக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு விசாரணைக் குழு வலியுறுத்தியது.

(ச-இ)

## நாளை

27.02.2024

**செவ்வாய்க்கிழமை**

**மாசி–15**

சுபநேரம் : 10.59 –12.29

ராகுகாலம் :03.29 - 04.59

## நாளொரு நல்வார்த்தை

போட்டியும், பொறாமையும், பொய் சிரிப்பும் நிறைந்த இவ்வுலகில், நமது பாதையில் நாம் நேராக நடந்துசெல்ல துணையாக இருப்பது கல்வி மட்டுமே

– அறிஞர் அண்ணா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாய்மாருக்கு பால்மாப் பொதி

யாழ்., பெப். 26

வவுனியாவில் பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 728 தாய்மாருக்கு பால்மாப் பொதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக வவுனியா, தாண்டிக்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள 36 பேருக்கு கடந்த புதன்கிழமை பால்மாப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-18)

## மூடப்பட்ட 1000 வெதுப்பகங்கள்

கொழும்பு, பெப்.26

அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம், நீர்க்கட்டணம் மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றால் நாடளாவிய ரீதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிப்பால் அதிகளவான நுகர்வோர் வெதுப்பக உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் இருந்து விலகியுள்ளனர்.

இதனால் வெதுப்பக தொழிற்றுறை பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# உடையார்கட்டு தெற்குக்கு பஸ் சேவை கோரும் மக்கள்

**கொழும்பு, பெப்.26**

**முல்லைத்தீவு, உடையார்கட்டுத் தெற்குக்கு பஸ் சேவையை நடத்த வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

உடையார்கட்டு தெற்கு, மூங்கிலாறு தெற்கு, உடையார்கட்டுக் கிழக்கு ஆகிய இடங்களில் ஆயிரத்து 200 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

இந்தக் கிராமங்களில் வாழும் மக்கள் உடையார்கட்டு தெற்கு வழியாக குரவயல், இடைக்கட்டுக் கிராமம்வரை 5 கிலோமீற்றர் தூரம் நடந்து பயணித்து உடையார்கட்டு நகரம்வரை சென்றே பஸ் சேவையைப் பெறவேண்டியுள்ளது.

குரவயல், இடைக்கட்டுக் கிராமம் வரை பேருந்துச் சேவைகள் நடத்துங்கள் எனக் கிராம மட்ட, பிரதேச மட்டக் கூட்டங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-13)

# கிளி. முக்கொம்பனில் காவலரண் அமைக்குக

### மாதர் அமைப்புகள் வலியுறுத்து

கிளிநொச்சி, பெப். 26

பூநகரி, முக்கொம்பனில் தனியான காவலரணை அமைத்துத் தருமாறு வடக்குக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரை சந்தித்து வலியுறுத்த மாதர் அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

முக்கொம்பனில் சட்டவிரோத மது உற்பத்தி உள்ளிட்ட குற்றச்செயல்கள் தலைதூக்கியுள்ளன. இதனால் நாளுக்கு நாள் குடும்ப வன்முறைகள் பதிவாகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கொம்பனில் காவல் பிரிவை அமைக்குமாறு பூநகரிப் பொலிஸ் நிலையம், இரணைமடுவிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் ஆகியவற்றுக்குத் தெரியப்படுத்தியபோதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை அக்கராயன் பொலிஸாரும் முக்கொம்பனுக்கு வருவதில்லை என்றும் முக்கொம்பன் மாதர் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-13)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.26

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும், பொலிஸாருக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி. தெஹிதெனிய, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சி ஹேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ப-27)

# எழுத்தாளர்களிடமிருந்து நூல்கள் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 26

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச இலக்கிய விருது விழாவுக்காக நல்லூர்ப் பிரதேச எழுத்தாளர்களிடமிருந்து நூல்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் முதன்முறையாக வெளியிடப்பட்ட நூல்கள் இந்தப் போட்டிக்காக ஏற்றுக்கொள்ளப்படும். நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளிச் சிறார்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.விஜயமோகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். (ச-17)

தருமபுரம் நெத்தலியாற்றுப் பகுதியில் அமைந்துள்ள நெத்தலியாறு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா, ஆலய குரு முதல்வர் ஸ்ரீ காந்தன் குருக்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-113)



# இ.ம.உ. ஆணைக்குழுவின் சந்திப்பால் பயனில்லை!

### வடமாகாண கடற்றொழில் இணையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.26

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும், வடக்கு சிவில் சமூகத்துக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு எந்த நம்பிக்கையையும் எமக்கு வழங்கவில்லை என்று வடமாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் மொஹமட் ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எங்களுடைய கருத்துகள் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே நாம் பல விடயங்களை முன்வைத்தோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் இருந்தாலும், எமது பிரச்சினைகள் தொடர்பாக அவர்களிடம் இருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. பரிந்துரை செய்கின்றோம். என்பதைத் தவிர, தீர்க்கமான முடிவுகள் எவற்றையும் அவர்களால் எமக்கு வழங்க முடியவில்லை.

மொத்தத்தில் இது பயனற்ற கலந்துரையாடல் என்றே நாம் கருதுகின்றோம். அறிமுக உரையிலேயே தங்களால் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என்று கூறினார்கள். அதனால் இந்தக் கலந்துரையாடல் மூலம் எமக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை -என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மோடி முதலிடம்

உலகளாவிய பிரபல தலைவர்கள் யார்? என்ற கருத்துக் கணிப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முதலிடம் பிடித்துள்ளார். 'மார்னிங் கன்சல்ட்' என்ற நிறுவனம் கடந்த ஜனவரி 30ஆம் திகதி முதல் பெப்ரவரி 5ஆம் திகதிவரை ஒரு வார காலப்பகுதியில் பிரபல தலைவர்கள் யார்? என்ற கருத்துக்கணிப்பை நடத்தி யது. இதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 78 சதவீதமும் மெக்ஸிக்கோ அதிபர் ஆன்ட்ரஸ் மானுவேல் லோபஸ் 65 சதவீதமும் அர்ஜென் ரீனா அதிபர் ஜாவிர் மிலே 63 சதவீதமும் வாக்கு களைப் பெற்று முதல் மூன்றிடங்களைப் பிடித்துள்ளனர்.

(ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 07 . 1944



மறைவு 25 . 02 . 2024

### சின்னத்தம்பி கந்தராசா

மந்துவில் மேற்கு, கொடிகாமத்தினைப் பிறப்பிடமாகவும், சித்தன் மாவடி வீதி, கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தராசா (ஓய்வு பெற்ற நிதி உதவியாளர் (FA) வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி) நேற்று (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், வாசுகி (ஆசிரியை, யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும், விஜயநேசன் அவர்களின் பாசமிகு மாமனும், துவாரகி, துவாரகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சித்தன்மாவடி வீதி, கல்வயலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 54130) 5-1

## மரண அறிவித்தல்

மலர்வு 10 . 07 . 1946



உதிர்வு 23 . 02 . 2024

### குமாரசாமி ஸ்ரீ கதிர்காம சம்பந்தர்

(ஓய்வுநிலை அதிபர்)

யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளை, யாழ்ப்பாணம் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிறிகதிர்காமசம்பந்தர் கடந்த (23.02.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னரர் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும், திலீபன் (லண்டன்), ரம்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோபிகுமார் (லண்டன்), லாவண்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவின், பிரணீத்தா, சிரோன், விஜேன், துசான் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவானந்தம், பத்மராஜா, பத்மநாதன், இந்திராணி, ஶ்ரீறிகாந்தா, காலஞ்சென்றவர்களான ரஞ்சினி, பத்மினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுப்பிரமணியம், மாங்களேஸ்வரி (டச்சு வீதி அளவெட்டி), மற்றும் காலஞ்சென்றவர்களான பரம்சோதி, இராஜேஸ்வரி, கணேசமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, சிவலிங்கம், கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அளவெட்டி டச்சு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அளவெட்டி,
டச்சு வீதி.

தகவல்:
குடும்பத்தினர்
076 488 7011
077 500 3669

(CS54013) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1957



மறைவு 25 . 02 . 2024

### வேலாயுதம் புண்ணியமூர்த்தி

மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் புண்ணியமூர்த்தி (M.G.R. திருமணசேவை ஓய்வு பெற்ற இ.போ.ச.சாரதி) 25.02.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் தங்கமுத்துவின் மகனும், சிங்கராசா (காலஞ்சென்ற தங்கேஸ்வரி), திலகவதி அவர்களின் மருமகனும் கலைச்செல்வி அவர்களின் அன்புக் கணவரும், சரஸ்வதி, பூமணிதேவி, தவமணிதேவி, காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரனும், அஜந்தா (அவுஸ்ரேலியா), நவஜீதா (கனடா), டாம்சியா (சுவிஸ்), லோகிதன், நிடோஜினி (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயரூபன் (அவுஸ்ரேலியா), அஜந்தன் (கனடா), பார்த்தீபன் (சுவிஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), கேதிகா (ரட்ணா முன்பள்ளி ஆசிரியை), ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகித், பவித், மிதுர்சா, அஸ்வின், அகானா, ஆஸ்ரியா, ஆர்யா, அன்சிகா, ரக்ஷா, ஆருஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்.
077 182 9217, 077 660 0568

(41883) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 03 . 1955



மறைவு 24 . 02 . 2024

### சேனாதிராசா இராசரத்தினம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாக வும் கொண்ட சேனாதிராசா இராசரத்தினம் நேற்று முன்தினம் (24.02.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - தங்கச்சியம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தியின் பாசமிகு கணவரும், மகேஸ்வரி, சிறிராசா, லீலாவதி, குலசேகரம், ரவிசேகரம் ஆகியோரின் சகோதரனும், தர்சிகா, பகீரத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தீயன், ஆரூரன் ஆகியோரின் அன்பு மாமனும், ஆரத்யா, ஆதித்யன் ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2024) திங்கட் கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

13, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(CS54013) N-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தல்

# இதுவரை பெயரிடப்பட்டுள்ள வேட்பாளரை ஆதரிக்கோம்!

## வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்காக இதுவரை பெயரிடப்பட்டுள்ள எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கமாட்டோம் - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 'ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான தேவைப்பாடு அரசுக்கு உள்ளது. ஆனால், அந்த முயற்சி கை கூடாது. ஆளுங்கட்சியினர் விரும்பா விட்டாலும் தேர்தலை நடத்தியாகவேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரை பெயரிடப்பட்டுள்ள எந்தவொரு வேட்பாளருக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம். முற்போக்கு சக்திகளை இணைத்துக்கொண்ட கூட்டணியாகவே தேர்தலை எதிர்கொள்வோம். நாம் எமது வேட்பாளருடன்தான் தேர்தலுக்கு வருவோம் ' - என்றார்.

(ம-44)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம்
19.09.1960

மறைவு
29.01.2024

கடந்த 29.01.2024 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

**திருஞானசெல்வம் ஆனந்தநடேசன் (ஜோதி)**

(உரிமையாளர் - Coral Tasty Food Industries)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.02.2024) திங்கட் கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (28.02.204) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து ஓடோடி வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் படுதித்தியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

117, ஐயனார் கோவில் வீதி,
கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
உப அலுவலகம், உரும்பிராய்.
ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 05, மானிப்பாய் வீதி, ஆதன இலக்கம் 26/18இல் பூதப்பிள்ளை இராமலிங்கம் எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தினை கணேசபதி சதீஸ் மகள் டிலானி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.

குறித்த ஆதனமானது வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய் இறை, வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, கிராம அலுவலர் பிரிவு J/263 இல், "கொங்கராயன் சீமா" நிலப்பரப்பு 3,7/8உம் கிணறும் வீடும். இது நில அளவையாளர் திரு.N.தேவராஜன் அவர்களால் 1972.01.27ஆம் திகதி 540ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு-1 எனக் குறித்த படி நிலபர.03 குளி 10.6 இதில் வடக்குப் பக்கமாக நில.பர. 01 குளி 14.3உம் இதற்குள்ளடங்கிய வீட்டுப் பாகமும் கிணறும். இது நில அளவையாளர் திரு.S.K. சிவானந்தன் அவர்களால் 2022.05.17ஆம் திகதி 5663ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1 என குறித்த படி நில.பர 01 குளி 12.47ம் அதற்குள்ளடங்கிய வீடும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் இதன் எல்லைகள் கிழக்கு ஒழுங்கை வடக்கு முருகேசு கந்தையா மனைவி அன்னம்மாவின் ஆதனம், மேற்கு அம்பலவாணர் மதியாபரணம் பெண் பூமாதேவியின் ஆதனம், தெற்கு ரமேஸ் மகள் நிரோஜியின் ஆதனம் இதடங்கலும். இன்னும் குறித்த படத்தில் துண்டு 2 எனக்குறித்த பாதை முகப்பும் குறித்த 5663ஆம் இலக்கப் படத்தில் குளி 04.34விஸ்தீரணமான பாதை நிலத்தில் இதற்குரிய பாதைப் பாவித்துரித்தும் இதடங்கலும் என ஆதன அட்டவணை குறிப்பிட்டும், இவ்வாதனத்திற்கு பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் முகதாவில் 2016.07.11ஆம் திகதி 10716ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கணேசபதி சதீஸ் அவர்களின் சீவிய உரித்திற்கு அமைவாக சதீஸ் மகள் டிலானி சொந்தக்காரர் என்றும், இவ்வாதனத்திற்கு தனியாக நில அளவைப் படம் இல்லாத காரணத்தினால் இவ்வாதனத்தை நில அளவையாளர் S.K.சிவானந்தன் அவர்களால் 2022.05.17ஆம் திகதி 5663ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1 எனக்குறித்த நிலப்பரப்பு 01 குளி 12.47ம் அதற்குள்ளமைந்துள்ள கிணறும் வீட்டுப்பாகமும் செய்பயிர் வான்பயிர் அனைத்தையும் உறுதிசெய்து பதிவு செய்வதற்காகவும் இப்பிரகடன உறுதி எழுதிக்கொள்வதாகவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால், 2022.06.11ஆம் திகதிய 12739ஆம் இலக்க பிரகடண உறுதி எழுதப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாதனத்தின் முற்பட்ட உறுதிகள், ஆதன வரலாற்று சுருக்கப் பிரதிகள்(தோம்பு) 1990.02.06ஆம் திகதியிலிருந்து ஏறத்தாள 33வருடங்கள் சீராக காணப்படுகின்ற போதிலும் 06.02.1990ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு பாலித தர்மபால குணசேகர அவர்களால் எழுதப்பட்ட 5803ஆம் இலக்க உறுதி மூலம் முத்துகந்தசாமியும் மனைவி அன்னலட்சுமியும் மக்கள் வங்கியிடமிருந்து கொள்வனவு செய்த உறுதிக்கு முற்பட்ட உறுதிகளோ தோம்புகளோ குறித்த உறுதியில் காட்டப்படவில்லை என்பதுடன், விண்ணப்பதாரராலும் சமர்ப்பிக்கப்பட வில்லை. அத்துடன் உரும்பிராய் உப அலுவலகத்திலுள்ள ஆதனவரிப் பதிவேட்டுப் பெயரிற்கும் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளில் குறிப்பிடப்பட்ட பெயரிற்கும் தொடர்பும் காணப்பட வில்லை.

எனவே இவ்வாதனத்தினை சதீஸ் மகள் டிலானி என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் தகுந்த சட்டரீதியான ஆவணங்களுடன் 2024.03.11 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சதீஸ் மகள் டிலானி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்

திகதி
2024.02.26

இ.பகீரதன்
செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

(cs 27977) (N-1)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு;
# கிடைத்தது 25 இலட்சம் நழுவியது 1.75 கோடி!

கொழும்பு, பெப்.26

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வடமராட்சியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு ரூ. 25 இலட்சம் ரூபா அதிர்ஷ்டம் அடித்துள்ள நிலையில் ஒரு கோடியே 75 இலட்சம் ரூபா கைநழுவியுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு அன்றைய அதிர்ஷ்டலாபச் சீட்டுகளுக்கான இலக்கங்கள் குலுக்கல் முறையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டன.

சுபிரி தன சம்பத வகை சீட்டிழுப்பில் வடமராட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு 25 இலட்சம் ரூபா அதிர்ஷ்டம் அடித்துள்ளது. மந்திகையில் அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை முகவரான இராமச்சந்திரன் சுதர்சனால் விற்பனை செய்யப்பட்ட சுபிரி தன சம்பத வகை சீட்டைப் பெற்ற நபருக்கே அதிர்ஷ்டம் கிட்டியுள்ளது.

இதில் ஆறு இலக்கங்கள் வெற்றி இலக்கத்துடன் பொருந்தியதை அடுத்து குறித்த நபருக்கு 25 இலட்சம் ரூபா அதிர்ஷ்டம் அடித்துள்ளது. இந்த வெற்றி இலக்கங்களுடன் தெரிவாகியிருந்த ஆங்கில எழுத்தும் பொருந்தியிருந்தால் சுப்பர் பரிசு தொகையான 2 கோடி ரூபா கிடைத்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-100)

கட்டடம் வாடகைக்கு

யாழ்/ வைத்தியசாலை வீதியில் கட்டடம் வாடகைக்குண்டு.
கடைகள் / அலுவலகங்களுக்கு ஏற்றது.

077 162 0626

ஆதனப்பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 01, வண்ணான் குளம் கிழக்கு ஒழுங்கை, 4/3 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் S.கனகரட்ணம் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கைச்சேர்ந்த அருணாசலம் தில்லையம்பலம் அவர்கள் 12.04.1969ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு தா.சங்கரப்பிள்ளை முகதாவில் 9065 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் அதேயூரைச்சேர்ந்த சின்னப்பொடி கனகரத்தினத்திற்கு வழங்கியுள்ளார்.

இவ்வாதனம் குறித்த சின்னப்பொடி கனகரத்தினம் எவருக்கும் உரித்துமாற்றம் செய்யாது மரணிக்க பிதாவழி முதுசமாக 2ஆம் பெயரான சிவலிங்கம் பெண் அன்னலட்சுமிக்கு வந்தடைந்தது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வடமேற்கு பெரியதம்பிரான் கோயில் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் சிவலிங்கமும் பெண் அன்னலட்சுமியும் 20.11.2006 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 3282 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அதேயிடத்தைச் சேர்ந்த தங்களது மகளாகிய செல்லையா ஆனந்தராசா பெண் உதயகுமாரிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த உதயகுமாரி தனது கணவர் செல்லையா ஆனந்தராசாவுடன் சேர்ந்து குறித்த அதனத்தில் தனக்குள்ள உரித்தினை நீக்க சம்மதித்து அற்றோனித்தத்துவப் பத்திரம் ஒன்றினை 2023.06.14 ஆம் திகதி நிறைவேற்றியுள்ளனர்.

இருப்பினும் குறித்த உரித்து அழிக்கப்படாமல் மீண்டும். குறித்த ஆதனம் திருகோணமலை, உவர்மலை, லோவர் வீதி இல-164/7A சேர்ந்த சிவலிங்கம் பெண் அன்னலட்சுமி 26.01.2012 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு முகம்மது சரிபு நைம் முகதாவில் 11040 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அதேயூரைச்சேர்ந்த தனது மகனான சிவலிங்கம் இளவேந்தனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் திருகோணமலை, உவர்மலை, லோவர் வீதி இல-164/7A சேர்ந்த சிவலிங்கம் இளவேந்தன் 25.10.2022ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி.சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 5249 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ஞானசுந்தரம் உதயகுமாரும் பெண் மகேஸ்வரிக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதனடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கு இறை, தற்காலம் வண்ணார்பண்ணை வடமேற்கு இறை உள்ளூராட்சி அதிகார சபை யாழ்ப்பாணம் மாநகர சபை பிரதேச செயலர் பிரிவு-நல்லூர் கிராமசேவகர் பிரிவு-J/98 "பிரப்பங்குளி" நில.பர 01 ஒன்று குளி 02.06 இரண்டு தசம் பூச்சியம் ஆறும் பயிர் வகைகளும். இது 2005ஆம் ஆண்டு பங்குனி 31ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபை அவர்களினால் அளந்து வரையப்பட்ட 1968C/04ஆம் இலக்கப்படத்தில் 1ஆம் இலக்கத்துண்டாக சுட்டப்பட்டுள்ளது.

எல்லைகள்

கிழக்கு :- கந்தசாமி ஜெகன்மோகனுக்கும், செல்லத்தம்பி சிவகுமாருக்கும் உரியவாதனம்.

வடக்கு :- 2005ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களினால் அளந்து வரையப்பட்ட 1968ஆம் இலக்கப்படத்தில் 1ஆம இலக்கத்துண்டு.

மேற்கு : - குறித்த 1968C/04 ம் படத்தில் சுட்டிய 3ஆம் இலக்கத்துண்டான 10 பத்தடியகல பொதுப்பாதை.

தெற்கு : - 1968C/04 இலக்கப்படத்தில் சுட்டிய 2ஆம் இலக்கத்துண்டு இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளனைத்தும் இன்னும் குறித்த படத்தில் சுட்டிய 3ஆம் இலக்கத்துண்டான 10 பத்தடியகலப் பொதுப்பாதை நிலத்தினூடாக பெரியதம்பிரான் வீதியிலிருந்து இவ்வாதனத்திற்கு போக்குவரத்து செய்யுமுரித்தும் குறித்த பாதை நிலத்தில் இதற்குரிய பங்கும்.

தற்போது ஞானசுந்தரம் உதயகுமாரும் பெண் மகேஸ்வரியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஞானசுந்தரம் உதயகுமாரும் பெண் மகேஸ்வரியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
யாழ் மாநகர சபை.

(cr.41868) (N-1)

# ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கரோலினா மாகாணத்தின் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகடொனால்ட் ட்ரம்ப் அறிவிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில், குடியரசுக் கட்சியும் ஜனநாய கக் கட்சியும் தமது வேட்பாளர்களை அறிவிப்பது தொடர்பான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதியான பைடன் போட்டியிடப்போவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ள நிலையில், குடியரசுக் கட்சியின்வேட்பாளராகப் போட்டியிடுவதில் ட்ரம்ப் மற்றும் நிக்கிஹாலே இடையில்பெரும்போட்டி நிலவுகின்றது.

இந்த நிலையில் கரோலினா மாகாணத்தில்குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்கோள் விழா

யாழ்ப்பாணம், பெப்.26

தென்மராட்சி கல்வி வலயத்தின் கால்கோள் விழா, இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபர் உ. தனசங்கர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. சத்தியபாலன், தென்மராட்சி வலயக் கல்வி ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், பழைய மாணவர் தனேஸ் ரஜனி ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-159)

போக்கட்டி அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா, அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய உளவளத்துறை ஆசிரிய ஆலோசகர் சே.ஜெயானந்தன், யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் க.ரொனிகஜன், கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சு. ரவிவர்மா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-159)





சங்கானை, கல்விக் கோட்டத்துக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியில் மாணவர் மகிழ்வூட்டல் செயற்பாடாக பலூன் கொண்டாட்டம் கலைமகள் கலையரங்கில் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ப-125)



பளை, பேராலை சீ.சீ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா அதிபர் ந. இராமதாஸ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-9)



மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-9)




வவுனியா, பன்றிக்கெய்தகுளம் வித்தியாலயத்தில், வித்தியாலய முதல்வர் தலைமையில் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.மோர்சிபவன் மற்றும் இலங்கை வங்கி ஓமந்தைக் கிளை முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-75)




கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் வலய மட்ட கால்கோள் விழா, கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தெ. சசிரங்கன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன், பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.கணேஷ்வரநாதன், முழங்காவில் இலங்கை வங்கி முகாமையாளர் [illegible] சிவரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-13-75)




வவுனியா வடக்கு வலயத்திலுள்ள நொச்சிக்குளம் மற்றும் புளியங்குளம் ஆரம்ப வித்தியாலய மாணவர்களின் கால்கோள்விழா, புளியங்குளம் ஆரம்பப் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை, அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஆலயத்தின் சப்பறத் திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமையும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை இரதோற்சவமும், 9 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ப-27)

தென்னிந்தியத் தொலைக்காட்சியில் நடந்த இசை நிகழ்ச்சியில் முதலிடத்தைப் பெற்ற சிறுமி கில்மிஷாவுக்கு வவுனியாவில் சமூகச் செயற்பாட்டாளரும் மருத்துவருமான மதிதரன் தலைமையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு வவுனியாவிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கில்மிஷா கௌரவிக்கப்பட்டதுடன், ஏற்பாட்டுக் குழுவால் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. (ச-18)





கனடா அல்பேட்டா மாநிலத்தின் பிரதிப் பிரதம நீதியரசரும், ஹவாய் சைவ ஆதீனத்தின் அடியவருமான அரண் வேலன், தற்போது யாழ்ப்பாணத்துக்கு திருத்தல யாத்திரைக்கு வந்துள்ளார். (ப-66)



சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி த.தெய்வேந்திரனுக்கு வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை சமூகத்தினரால் மணி விழா நேற்று சனிக்கிழமை நடத்தப்பட்டது. (ப-9)





கொக்குவில் மத்தி கிழக்குப் பகுதியில் ஜே/126 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 18 வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு 'கியூடெக் -கரிதாஸ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் சேதனக் கூட்டுப்பசளை தயாரிக்கும் முறை பற்றிய செய்முறைரீதியான பயிற்சி, விவசாயப் போதனாசிரியரால் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது. (ப-66)

## வட்டு. சிவாச்சார்யாருக்கு தமிழ்நாட்டில் உயரிய விருது

யாழ்ப்பாணம்,பெப். 26

வட்டுக்கோட்டை 'சர்வசாதக ப்ரகீர்த்தி' சிவஸ்ரீ ந.பிரசாந்த சிவாச்சார்யாருக்கு 'சிவாகம கலாநிதி' உயர்விருது வழங்கி தமிழ்நாடு அரசு கௌரவித்துள்ளது.

தமிழ்நாடு தஞ்சாவூர் திருப்புவனம் ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனாகிய ஸ்ரீ சம்பஹரேஸ்வர சுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேக விழாவில் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி முன்னிலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் இந்த விருது வழங்கப்பட்டது.

இலங்கை மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளிலும் திருக்கோயில் கும்பாபிஷேக மஹோற்சவங்களிலும் முதன்மை சர்வசாதகாச்சார்யாராக சிவஸ்ரீ ந.பிரசாந்த சைவாகம ஆன்மீகப் பணிகளை ஆற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மாசிமகத் தீர்த்த உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாளால்...

பாதிக்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாடுகளுக்கு அமைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-19)

## தமிழ்த்...

'தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்' என்ற தொனிப்பொருளில் உலகத் தமிழ் மொழித்தின ஏற்பாட்டுக் குழுவின் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது. இதன்பொழுது சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அருகிச்செல்வதை நினைவூட்டுவதற்கும் அதைத் தக்கவைப்பதற்கும் சர்வதேச தினங்கள் கொண்டாடப்படுகின்றன. தமிழ்த் தேசிய எழுச்சி நாளும் அந்த வகைக்குள் அடங்கிவிடக்கூடாது. எப்போது அந்த வகைக்குள் அது அடங்கி விடுகின்றதோ அன்றே இந்த பூமியில் தமிழன் என்ற இனம் இல்லாமல் போய்விடும்.

நீங்கள் எல்லோரும் அஞ்சல் ஓட்டத்தைப் பார்த்திருப்பீர்கள். ஒருவர் கையில் அஞ்சல்கோலைக் கொண்டு வந்து கொடுப்பார் மற்றையவர் அதைப் பெற்றுக் கொண்டு ஓடுவார். அவர் இன்னொருவரிடம் கொடுப்பார். இப்படி வெற்றியிலக்கை அடையும் வரையில் ஒருவர் இன்னொருவரிடம் அஞ்சல் கோலை பரிமாறிக் கொண்டே இருப்பார்கள். அதைப்போலத் தான் நாமும் சில விடயங்களை அடுத்த தலைமுறையிடம் கையளிக்கவேண்டும். அவர்கள் அதைக் கொண்டு ஓடுவார்கள். அஞ்சல் கோலை உரிய வகையில் அடுத்தவரிடம் ஒப்படைக்காவிட்டால் தோல்வியில் முடிந்துவிடும்.

**நாம் சரியாகச் செயற்பட்டோமா?**

இன்றைய இளம் சமுதாயத்தை நோக்கி எல்லோரும் குற்றம் சுமத்துகின்றனர். தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து அவர்கள் விலகிவிட்டார்கள் என்று கூறுகின்றனர். போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டார்கள், மதுப்பாவனைக்கு அடிமையாகிவிட்டார்கள், வாள்வெட்டுகளிலும் குழு மோதல்களிலும் ஈடுபடுகின்றார்கள் என்று இளம் சமுதாயத்துக்கு எதிராக குற்றப்பட்டோலை வாசிக்கின்றனர். சிங்களத் தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகக் கடந்த தடவை தேர்தலில் யாழ்ப்பாணத்தில் வென்றிருந்தார். அவரது வெற்றிக்குப் பின்னால் பல இளைஞர்கள் இருந்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியத்தை அந்த இளைஞர்கள் தொலைத்துவிட்டார்களா? வேலை வாய்ப்புக்கும் அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசியத்தை அடகு வைத்துவிட்டார்களா? இணக்க அரசியலுக்கு முன்னால் தமிழ்த் தேசியம் மண்டியிட்டுவிட்டதா? இப்படி பல கேள்விகள் இருக்கின்றன. இங்கே இளைஞர்கள் மீது குற்றம் சுமத்த முன்னர் அவர்களிடம் தமிழ்த் தேசியம் என்கின்ற அஞ்சல் கோலை நாம் கையளித்திருக்கின்றோமா என்ற கேள்வி பிரதானமானது. அடுத்த தலைமுறைக்கு தமிழ்த் தேசியத்தை ஊட்டி வளர்த்திருக்கின்றோமா? தமிழ்த் தேசியப் பற்றுடன் இருந்த நாம் அந்த வழியில் இளைஞர்களைப் பயணிக்கச் செய்திருக்கின்றோமா? இளைஞர்களால் தான் தமிழ்த் தேசியம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் தங்கள் கைகளில் தமிழ்த் தேசியத்தை எடுத்தால் மாத்திரம் தான் எம்மால் விடிவை நோக்கி நகரமுடியும்.

**தலைவர்கள் தடுமாற்றம்**

இலங்கைத் தமிழரசுக்கட்சி தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றியீட்டியது. தமிழ்த் தேசியத்தை நோக்கி இளைஞர்களைத் திரட்சியாக்கிய ஒன்றாக அதைச் சொல்லலாம். இளைஞர்கள் தமிழ்த் தேசியத்தை உயிர் மூச்சாக வரிந்து கொண்டார்கள். அதற்காக தமது உயிரைக் கொடுக்கவும் துணிந்தார்கள். இளைஞர்களுக்கு அந்தப் பாதையைக் காட்டிய எங்கள் தலைவர்கள் பின்னர் தடுமாறிய போதும் இளைஞர்கள் தங்கள் கொள்கைகளில் இருந்து விலகவில்லை. அதில் உறுதியாக இருந்தார்கள். தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்துவதில் அன்றைய இளைஞர்களின் பங்குதான் அளப்பரியது. இப்போதும் அதேதான் நடக்கின்றது. அன்று இளைஞர்களாக இருந்த நாம் தான் இன்று அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய இடத்தில் இருக்கின்றோம். நாங்கள் சரியான முறையில் எங்கள் அடுத்த தலைமுறைக்கு சொல்லிக் கொடுத்திருக்கின்றோமா? இப்போதும் வயதில் மூத்தவர்கள் கையில் தான் அரசியல் இருக்கிறது. இதில் என்னை விடுத்து நான் சொல்லவில்லை. வயதில் மூத்தவர்கள் கையில் அரசியல் இருப்பதால் தான் என்னவோ தமிழ்த் தேசியம் சிதைவடைகின்றதோ தெரியவில்லை. இளைஞர்களுக்கு தமிழ்த் தேசிய இரத்தம் பாய்ச்சி அவர்களைப் புத்துணர்வு ஊட்ட வேண்டிய அரசியல் முதியவர்கள், இணக்க அரசியல் பாதையையும் தெளிவில்லாத இலக்கையும் வைத்திருப்பதால் தான் இன்றைய இளைஞர்கள் தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். வயதில் மூத்த தலைவர்கள், தேசியத்தின் பால் மிக நாட்டமுள்ள இளைஞர்களுக்கு வழி விடுவதுதான் நல்லது. அவர்களின் கைகளுக்கு தமிழ்த் தேசிய அரசியல் செல்லுமாக இருந்தால் மீண்டும் புத்தூக்கத்துடன் அது நகரத் தொடங்கும்.

**நாம் ஒதுங்குவது நல்லது**

1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் என்ன நடந்ததோ அதேபோன்று இளைஞர்களின் கைகளில் எல்லாவற்றையும் ஒப்படைத்து நாம் ஒதுங்கிக்கொண்டால் தமிழ்த் தேசியம் எழுச்சியடையும்.

நான் ஓர் ஊடக நிறுவனத்தின் நிறுவுநர். எனது நிறுவனமும் தமிழ்த் தேசியத்தையே இலட்சியமாக வரிந்துகொண்டு இன்று வரை அதன்வழித்தடத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறது. அவ்வாறு அது பயணிப்பதற்குக் காரணம் நான் பத்திரிகையின் செல்நெறியில் தலையிடாமல் இருப்பது தான். அதற்காக நான் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமானவன் என்று அர்த்தமல்ல. அடுத்த தலைமுறைகளின் கைகளில் ஒப்படைத்திருப்பதால்தான் தமிழ்த் தேசியத்தை உறுதியாக வைத்திருக்கின்றார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் என்பது ஒரு நாளில் முடிந்துவிடும் விடயமாகிவிடக்கூடாது. இது இளைஞர்களிடையே விடுதலைப் பொறியை, தமிழ்த் தேசிய எழுச்சியை விதைக்கவேண்டும். இளைஞர்களை மீண்டும் தமிழ்த் தேசியப் பாதையில் திரட்சியாக்கவேண்டும். அதற்கு முதியவர்கள் வழிவிடவேண்டும். அதன் பின்னர் தமிழ்த் தேசிய எழுச்சி என்பது தானாகவே உருவாகும்- என்றார். (அ-ஒ-125-159)

## அழுத்தங்கள்...

"அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தற்போது சிறை வைக்கப்பட்டுள்ள 5 இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு இந்தியத் தூதுவரால் கோரப்பட்டுள்ளது. அது தனது அமைச்சுக்கு அப்பாற்பட்ட விடயம். நீதிமன்ற விவகாரம்" என்று அமைச்சர் டக்ளஸ் பதிலளித்துள்ளார். இதனையடுத்து, இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு எதிர்ப்பு வெளியிடாமல் இருக்குமாறு இந்தியத் தூதுவர் கோரியதாக அறியமுடிகின்றது.

இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில், இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் மீனவர்களைக் கைது செய்தாலும், படகின் ஓட்டுநருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதை நிறுத்து மாறு இந்தியத் தூதுவர் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். மேலும் இலங்கையில் சிறைவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை வெலிக்கடைச் சிறையிலிருந்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறும் இதன்போதும் இந்தியத் தூதுவரால் கோரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை - இந்தச் சந்திப்பின்போது இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே, அவர்களை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் கடற்றொழில் அமைச்சுப் பதவியிலிருந்து விலகிவிடுவேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது கூறியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதுடில்லியிருந்து வந்துள்ள அந்த நாட்டின் புலனாய்வுக் கட்டமைப்பின் உயர் அதிகாரிகள் சிலரையும் சந்தித்தார் என்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. (அ-ஒ-5)

## 'எட்கா'...

தொழில்நுட்பம் என்பன இலங்கைக்கு வருவதால் இலங்கைத் தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அலிசப்ரி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவ்வாறானதொரு நிலை ஏற்படாது. முதலீடுகள் வரும். முதலில் நாம் ஒரு விடயத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும், உலகப் பொருளாதாரம் என்பது 86 ஆயிரம் பில்லியனாகும். இலங்கையின் பொருளாதாரம் என்பது 74 பில்லியனாக உள்ளது.

கடந்த காலத்துக்கு அஞ்சிச் செயற்பட முடியாது. இந்தியா இன்று வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுடன் கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபடுகின்றன. இந்தியத் தரப்பில் இருந்து எமது நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய பொருளாதாரப் பங்களிப்பு பற்றியே நாம் கவனம் செலுத்தவேண்டும். போட்டித் தன்மை உருவாகும். அப்போதுதான் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகரலாம்.

இலங்கைச் சந்தையை மட்டும் குறி வைத்து முதலீட்டாளர்கள் வருவதில்லை, அவர்களுக்குப் பெரும் சந்தை வாய்ப்பு அவசியம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டும். அதன்நிமித்தமே வர்த்தக ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளன. ஆசியான் நாடுகள், சீனா, பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகள் இதே வழிமுறையைத்தான் பின்பற்றின. எனவே, குறித்த உடன்படிக்கையைச் சிறப்பாகப் பயன்படுத்தினால் எமது நாட்டுக்கு நன்மைகிட்டும் - என்றார். (அ-ஒ-44)

## நிறைவேற்றதிகார...

ஆட்சியின்கீழ் நாடாளுமன்றத்தில் ஆட்சியமைக்க சிறு கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டி ஏற்பட்டது.

சந்திரிகா அம்மையாருக்கு ஆதரவு அலை இருந்தது எனக் கூறப்பட்ட தேர்தலில்கூட நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைக்க சிறு கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியமானது.

மஹிந்த ராஜபக்சவின் முதலாவது ஆட்சிகாலத்தில் ஒரு தரப்பு அரசியல் இருந்து வெளியேறி, காலைவாரியது. ஆனால் எதிரணியில் ஒரு தரப்பை இணைத்துக் கொண்டே மஹிந்த செயற்பட்டார். நல்லாட்சியின்போதும் சிறு கட்சிகளின் ஒத்துழைப்புடன்தான் ஆட்சி அமைக்கப்பட்டது.

ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு, நாட்டின் பிரதானியாக பிரதமர் இருக்கும் போது ஆட்சியமைப்பதற்கு இவ்வாறு சிறு கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக அந்தக்கட்சிகளின் கோரிக்கைக்கமைய செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அது நாட்டுக்கும், இந்நாட்டில் வாழும் பிரதான இனத்துக்கும் இழைக்கப்படும் அநீதியாக அமையும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டுமெனில் பிரதமருக்கு நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடிய வகையில் தேர்தல் முறைமை மாற்றப்படவேண்டும் - என்றார். (அ-ஒ-44)

## யாழ். நகரில்...

மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்றே தீ மூட்டப்பட்டுள்ளது. சந்தேகநபர் சி.சி.ரி.வி. காணொலி ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முன்பகை காரணமாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாக தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-27-66)

## மோ.சைக்கிள்...

திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புதிய பேருந்து நிலையம் அருகில் மோட்டார் சைக்கிளை நேற்று முன்தினம் இரவு நிறுத்திவிட்டு கொழும்பு பயணித்த ஒருவர் மறுநாள் பகல் வந்து பார்த்தபோது அவரது மோட்டார் சைக்கிள் காணப்படவில்லை. அந்தப் பகுதியில் தேடியபோதும் மோட்டார் சைக்கிள் கிடைக்காத நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார். (அ-ஒ-18)

## ரணில்...

பிரதேச அபிவிருத்தி பற்றிப் பேசப்பட்டதோடு, எதிர்கால அரசியல் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (அ-ஒ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சி

# வழக்குக்கு முதல்நாள் கூடுகிறது அரசியல் குழு

யாழ்ப்பாணம், பெப். 26
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு மற்றும் அந்தக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளுக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் எதிர்வரும் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் நாளைமறுதினம் புதன்கிழமை வவுனியாவில் அந்தக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வழக்குத் தொடர்பான விடயங்களே ஆராயப்படவுள்ளன. (ஒ-இ)

# கடவைக் காப்பாளர்கள் போராட்டத்தில் குதிப்பு

மட்டக்களப்பு, பெப். 26
மட்டக்களப்பு ரயில்வே கடவைக் காப்பாளர்கள் தொடர் கவனவீர்ப்பை நேற்று ஆரம்பித்துள்ளனர்.
மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 24 ரயில் கடவைகளில் கடமையாற்றும் ரயில் கடவைக் காப்பாளர்கள், தமது சேவையை நிரந்தரமாக்கக் கோரி கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.
சுமார் 11 வருடங்களாக நிரந்தர நியமனமின்றி 250 ரூபா நாள் சம்பளத்துக்குப் பணிபுரியும் தம்மை கடமையிலிருந்து நீக்கி, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் உள்வாங்கப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாக, போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (அ-ஒ-இ)

# 100,000 கிலோமீற்றர் வீதி புனரமைப்பு ஆரம்பம்


கொழும்பு, பெப். 26
ஒரு இலட்சம் கிலோமீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் வீரகோன் தெரிவித்தார். (அ-ஒ-இ)

# தேர்தல் செலவுகள்; ஆணைக்குழுக் கூட்டம்!

கொழும்பு, பெப். 26
தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு அறிவிக்க தேசிய தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை நாளையும் மார்ச் 6 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.
தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி தேர்தலுக்குச் செலவிடப்படும் பணம் மட்டுப்படுத்தப்படவேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார். எனினும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இதுவரை ஒரு தேர்தலும் நடத்தப்படவில்லை.
அதன் காரணமாக குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு உரிய புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ஒ-இ)

வேலையாட்கள் தேவை
பருத்தித்துறையில் இயங்கி வரும்
சண் டிஜிட்டல் ஸ்ரூடியோ
(Sun Digital Studio)
நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
• படப்பிடிப்பாளர் - Photographer
• வடிவமைப்பாளர் - Designer
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
அனுபவம் தேவையில்லை. பயிற்சிகள் வழங்கப்படும்.
தொடர்பு: 077 704 6623 / 077 881 1530

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ். சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த
சின்னப்பு கெங்காதரன்
(பிரபல மில், லொறி - உரிமையாளர்)

திதி: 26.02.2024

ஆண்டு ஆறு கடந்தாலும்
ஆறிடுமோ உங்கள்
நினைவலைகள் அப்பா!

கண்ணின் மணிபோல்
எம்மை காத்த அன்புத்தெய்வமே
ஆறிடுமோ எங்கள் துயரம் நீங்கள்
பிரிந்து ஆறு வருடம் ஓடிப் போனது
இன்னமும் நம்பவே முடியாமல்
நாங்கள் இங்கே தவிக்கின்றோம்.

ஆண்டுகள் பல சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகளும்,
நிகழ்வுகளும் உங்கள் ஆத்மா
சாந்தியடைந்து இறைவனடி சேர
எல்லாம் வல்ல பிராயடி
வைரவரும் நுணுவில் பிள்ளையாரினதும்
அருள் கிடைத்திட பிராத்திக்கின்றோம்..!

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 01.12.1947
மறைவு 03.03.2018

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்
மனைவி, மகன்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org